


**01. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கான வாய்ப்பை செயற்கை நுண்ணறிவு உருவாக்கி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. தேசிய விளையாட்டு ஆளுமை சட்டம் 2025-ன் ஒருபகுதி இன்று நடைமுறைக்கு வந்தது.

3. தமிழ்நாட்டில் சி, டி பிரிவு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

4. 2026 ஆங்கில புத்தாண்டு உலகம் முழுவதும் உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

5. கோவை, நீலகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

குடியரசு தலைவர்

நாட்டில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கான வாய்ப்பை செயற்கை நுண்ணறிவு உருவாக்கி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் மாளிகையில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், பல துறைகளில் செயற்கை நுண்ணறிவு துரித வளர்ச்சி கண்டுவருவதாக எடுத்துரைத்தார்.

எனவே இத்தொழில்நுட்பத்தை அனைவரும் கற்கவேண்டியது அவசியமாகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கற்றுணர்ந்து, தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்வதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார தன்னிறைவை முன்னெடுத்து செல்ல செயற்கை நுண்ணறிவு தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே கொண்டு சேர்ப்பது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் ஏராளமானோர் ஆளுமை பெறவும், திறன்களை வளர்த்துக்கொள்ளவும், நாட்டின் எதிர்கால பணிகட்டமைப்பிற்கு தயார்படுத்திக்கொள்ளவும் செயற்கை நுண்ணறிவு கற்றல் முக்கிய பங்காற்றும் என்று குறிப்பிட்டார்.

************

மாத்ரு வந்தனா

கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டசத்திற்கு நிதி உதவி வழங்கும் பிரதமரின் மாத்ரு வந்தனா திட்டம் தொடங்கப்பட்டு 9 ஆண்டுகள் இன்று நிறைவடைந்தது.

2017ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதி தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் மூலம் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கர்ப்பிணி பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

இதன்கீழ் முதல் மற்றும் இரண்டாவது குழந்தை பேறுக்காக முறையே ஐந்தாயிரம் மற்றும் ஆறாயிரம் ரூபாய் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தகுதியுடைய பயனாளிகளுக்கு ஜனனி சுரக் ஷா திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையும் வழங்கப்படும் நிலையில், இதன்கீழ் 50 லட்சம் பயனாளிகள் பதிவு செய்திருப்பதாகவும், இவர்களுக்கு 19 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஊட்டசத்து, முறையான மருத்துவ பரிசோதனைகள், பிரசவகாலத்தில் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை உறுதி செய்யும் வகையில் இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

************

ராஜ்நாத்சி ங்

உள்நாட்டிலேயே ராணுவ தளவாடங்கள் உற்பத்தி மற்றும் எதிர்காலத்திற்கு தேவையான நவீன தொழில்நுட்பங்களை முன்னெடுத்து செல்வதன் மூலம் பாதுகாப்பு ஆராய்ச்சி

மேம்பாட்டு முகமை நாட்டின் தற்சார்பை நிலைநாட்டி உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் பணியாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள அவர், இதனால் முப்படைகளின் தன்னம்பிக்கை மேம்பட்டு எவ்வித சவாலையும் சமாளிக்கும் உத்வேகத்தையும் திறனையும் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

பாதுகாப்பு முகமை பணியாளர்களின் அறிவியல் சார் திறனும், அர்ப்பணிப்பு மிகு சேவையும், தேச பற்று உணர்வும் சுய சார்பு பாரதத்திற்கு இன்றியமையா பங்காற்றுவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

************

தேசிய விளையாட்டு ஆளுமை சட்டம்

தேசிய விளையாட்டு ஆளுமை சட்டம் 2025-ன் ஒருபகுதி இன்று நடைமுறைக்கு வந்துள்ளது.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புதன்மை, நெறிசார்ந்த விதிமுறைகள், விளையாட்டு நிர்வாகத்தில் ஆளுமை, வீர வீராங்கனைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது போன்றவற்றிற்கு இந்த சட்டம் வழிகோலுகிறது.

இந்த சட்டம் படிப்படியாக நடைமுறைபடுத்துவதன் மூலம் விளையாட்டுத்துறையின் ஆளுமை கட்டமைப்பில் சுமூக மாற்றங்கள் கட்டம், கட்டமாக கொண்டுவர வகை செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஒலிம்பிக் குழு, பாராலிம்பிக் கமிட்டி, விளையாட்டு கூட்டமைப்புகள், பிராந்திய விளையாட்டு அமைப்புகள் உள்ளிட்ட நாட்டின் விளையாட்டு கட்டமைப்புகளை ஒழுங்குமுறைபடுத்தும் வகையில் இந்த சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

************

பிரதமர்

……… . MUSIC……

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் 2025 சீர்திருத்தங்களின் ஆண்டாக மேம்பட்ட நிலையில், விளையாட்டு துறையில் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டது குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

……… . MUSIC……

2025-ம் ஆண்டில் விளையாட்டு துறையில் சர்வதேச அளவில் சாதனை அளவாக நம்நாடு பதக்கங்களை குவித்ததோடு, தடகள விளையாட்டிற்கான தேசத்தின் சீரிய அணுகுமுறையால் வரலாற்று சிறப்பு மிகு வெற்றிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான அமைச்சகத்திற்கு நடப்பு நிதியாண்டில் மூன்றாயிரத்து 700 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் மூலம் இளையோர் ஆளுமையில்

விளையாட்டிற்கான முக்கியத்துவத்தையும், தேசத்தின் விருப்பத்தையும் மத்திய அரசு வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய விளையாட்டு கொள்கை 2025-ற்க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதன் மூலம் நம் தேசத்தை உலகளாவிய விளையாட்டு துறையின் உந்துசக்தியாக முன்னெடுத்து செல்வதற்கான துணிச்சல்மிகு வரைபடத்திற்கு வழிகோலப்பட்டது.

இதனால் தேசிய விளையாட்டு ஆளுமை சட்டம் 2025-ற்கும் வகை செய்யப்பட்டது.

மகளிர், இளம் தடகள வீரர்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான பாதுகாப்பு நிலைநாட்டப்பட்டதுடன், சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்ப விளையாட்டிற்கான விதிகளும் உறுதி செய்யப்பட்டது.

ஏழை எளிய குடும்பத்தில் உள்ள குழந்தையும் தன் திறமையின் மூலம் மிக இளம் வயதிலேயே உச்சத்திற்கு செல்லும் வகையிலான ஆரோக்கியமான சூழலை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

.. பிரதமர் வாய்ஸ் ..

ஸ்குவாஷ் உலக கோப்பை,

ஐ.சி.சி மகளிர் கிரிக்கெட் உலக கோப்பை,

ஐ.சி.சி சேம்பியன் ட்ராஃபி,

பார்வையற்ற மகளிர் டி20 வெற்றி,

உலக குத்து சண்டை போட்டியில் 9 தங்க பதக்கங்களை குவித்தது.

ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகளில் 48 பதக்கங்களுடன் ஆறாவது இடத்தை கைப்பற்றியது,

கோ கோ விளையாட்டில் தோல்வியே இல்லாத வெற்றி போன்றவை விளையாட்டு துறை மற்றும் எதிர்கால தலைமுறைக்கான மத்திய அரசின் அர்ப்பணிப்பு மிகு செயலாக்க திறனை பறைசாற்றுகிறது.

……..Music……..

************

ரிசர்வ் வங்கி

உள்நாட்டு தேவைகள், மிதமான பணவீக்கம், அரசின் சீரிய கொள்கைகளால் உலகளாவிய நெருக்கடியிலும், இந்தியாவின் பொருளாதாரம் வலுவான நிலையில் முன்னெடுத்து செல்லப்படுவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

வங்கியின் பொருளாதார நிலைத்தன்மை தொடர்பான அறிக்கையில் உள்நாட்டு நிதி நிலமை சீராக உள்ளதாகவும், கூறப்பட்டுள்ளது.

அதேவேளையில் வெளிநாட்டின் நிச்சமற்ற சூழலாலும், புவி அரசியல் நிலமையாலும், வர்த்தகம் சார்ந்த அச்சுறுத்தல்களாலும், எதிர்கால சவால்களுக்கு வாய்ப்பிருப்பதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

************

BSNL

wi-fi மூலமான அழைப்பு சேவைகள் நாடுமுழுவதும் விரிவுபடுத்தப்படுவதாக BSNL இன்று அறிவித்துள்ளது.

சவாலான சூழல்களிலும், தடையற்ற உயர்தர சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக ஊரக பகுதிகள் மற்றும் தொலைதூர பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறுவதற்காக இந்த சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

************

போனஸ்

தமிழ்நாட்டில் சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மூவாயிரம் ரூபாய் மிகை ஊதியம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தொகுப்பூதியம், சிறப்பு கால முறை ஊதியம் பெறும் பணியாளர்களும், மாத அடிப்படையிலான முழு நேர பகுதி நேர பணியாளர்களுக்கும் ஆயிரம் ரூபாய் மிகை ஊதியம் அளிக்கப்பட உள்ளது.

மேலும் சி டி பிரிவு ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம அலுவர்கள், கிராம உதவியாளர்கள் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்களுக்கு ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 183 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் 9 லட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவர்.

************

புத்தாண்டு

2026 ஆங்கில புத்தாண்டு உலகம் முழுவதும் உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் வளமும், நலமும், தழைத்தோங்க நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயம், தூத்துக்குடி பனிமயமாதா பேராலயம், உள்ளிட்ட அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

மாநிலத்தின் அனைத்து திருக்கோவில்களிலும் அதிகாலையிலேயே கோவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனை இடம்பெற்றன.

நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலில் சொர்ணாபிஷேகம் உள்ளிட்ட சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

வணிக சிலிண்டர்

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 110 ரூபாய் உயர்ந்து ஆயிரத்து 849 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இன்றுமுதல் இந்த விலை உயர்வு நடைமுறைக்கு வருகிறது.

இருப்பினும் வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர் விலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

************

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் மக்கள் மிக பெரிய மாற்றத்தை எதிர்நோக்கி இருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் அஇஅதிமுக கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சி வரும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள இருப்பதால் மாற்றங்கள் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளில் பல இன்னும் மக்களை சென்று சேரவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் தமிழர்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் கொண்டுவரப்படவில்லை என்று தெரிவித்த அவர், போதை குற்றசாட்டுகள் அதிகரித்துள்ளதாக கூறினார்.

************

ஆழியாறு

கோவை ஆழியாறு அணையிலிருந்து பாசனத்திற்காக நாளை முதல் 135 நாட்களுக்கு தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்மூலம் பொள்ளாச்சி ஆணைமலை வட்டங்களில் உள்ள 22 ஆயிரத்து 332 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

************

வானிலை

தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்க கடல் பகுதியில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

டென்னிஸ்

அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் **Vaidehi Chaudhari** முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் சக வீரர் **Saily Prashantkumar Thakkar**-ரை 6-2 6-1 என்ற நேர் செட்களில் வென்றார்.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது